ஐயமற்றனனுசையற்றேன்பிறிவற்றே
னெய்யவின்னையொத்தேன்பொருள்வடிவமாய்நடங்கேன்
செய்யலாவதோர்நிட்டையுற்றேன்சித்தமகிழ்ச்சி
வெய்யதுன்பமொன்றிலனிதுவதுவெனவிளங்கேன். (உ௩உ)

சோதிமண்டலத்தெழுந்ததாய்ச்சுவரினிற்படாமன்
மீதுவிஞ்சுதல்குறைதலற்றிருப்பதோர்விளக்கந்
தீதிலாவெனக்குவமையாஞ்சகத்தினைத்தீர்ந்து
யாதுமேவிவின்னிற்பதற்கிணையொத்துநின்றேன். (உ௩௩)

உண்டெனுந்தன்மையென்னுருவேறென்றுமுரைக்கக்
கண்டிலேனதனுலெனைக்கருணைசெய்குருநீ

Koviloor Digital Library

முண்டகப்பதத்தொழுதனனென்றவன்மொழியத்
தொண்டைவாயவன்மேற்செயல்சொல்லுதியென்ருள். ()

பற்றுவிடிலன்படிகமேற்பாயொளியென்ன
நிற்றநீசொன்னசெய்குவனென்றனனிருப
ளுற்றநிதெனிற்பேதைமையொன்றையுமொழித்து
மற்றைமுன்னுளவியற்கையிலிருப்பதுவழக்கே. (உகு௫)

சிறிதுகாலமாமிவ்வகையிருந்துபின்றேகம்
பிறிபுநாளந்தநிலேயினைப்பெறுதுமாலென்ன
நெறிசெல்வேந்தனுமியைந்தனனேரிழையெழுந்து
குறிகொள்சங்கற்பவிதியினலிவையிவைகொணர்ந்தாள். ()

எழுவாரிநீர்மணிக்குடத்திவனைநீராட்டிக்
கேழுலாமணித்தவிசிடைக்கிளர்வுறவைத்து
வாழியென்றனளளவறுசேனையும்வகுத்தாள்
வேழவெம்பரித்தேரொடும்வீரரால்விளங்க. (உகுஎ)

இனையவேலேயிலிதபமொத்தின்பமேயியற்று
மனையதேவிசூடாலேயுமரசனுமெழுந்து
புனையும்வேழமேற்கொண்டனர்பொன்னகர்நோக்கி
வினைசெய்தாற்பெரும்படையொடமகிழ்வுறமீண்டார். ()

புரியைநண்ணலுநகருறுதானைபோமென்று
வரிசையாலெதிர்கொளவிருதானையும்வயங்கப்
பரிவினண்ணினர்நகர்பதினுயிரம்வருடந்
தெரிவைபோடிருந்தழிவிலாப்பதம்பின்புசேர்ந்தான்.(உகூ)

வள்ளலேயிந்தமரபினற்றெழில்களின்மருவித்
துள்ளுமின்பமிற்சாந்தமெப்போதினுந்தொடர்ந்தாற்
றெள்ளுபோகமும்வீடுமுண்டாமென்றுதெளிந்த
வுள்ளமாதவவசிட்டமாமுனிவரனுரைத்தான். (உ௪௦)

சிகித்துவசன்கதை முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௧அ௪௪.

Koviloor Digital Library

கசன்கதை.

தெளிவின்மிக்குயர்சிகித்துவசன்கதைசெப்பினனிவ்வாறே
யளியமிற்றியாலருந்துயரனுகலையனையவனெறிபோலக்
குளிர்முகச்சுரர்குருமகனுணர்ந்தனனதுகுறித்துணர்கென்ன
வெளிப்படவவனுணர்ந்துளநெறியினைவிளம்புதியெனக்கேட்டான்

குருசில்கேட்டலும்வசிட்டனங்குரைசெய்வான்குருமகன்கசனெ
ன்பான், றெரிபதத்தொடுபதப்பொருடெரிந்துளோன்றேவர்தேசி
கன்முன்போய், விரிபிறப்பெனுங்கூட்டினின்றுயிரொனும்வெங்கரி
புறம்போகைக், குரியவாறெதுகூறெனக்கேட்டலுமும்பர்மந்திரி
சொல்வான். (உ)

அனத்தமாமகரங்களுக்குறையுளாயகன்றவிப்பவவேலை, கனத்த
தோர்சகலத்தியாகத்தினாற்கடக்கலாமென்றோதத், தனத்தையா
தியாஞ்சகலமும்விட்டனன்றனிபனாய்க்கசன்சென்று, வனத்தின்
மேவினனெட்டியாண்டிருந்தனன்மறித்தவன்பிதாவந்தான். (ங)

வந்ததந்தையைவணங்கியேசகலமுமாற்றியேயெட்டாண்டு
சிந்தையற்றிருந்துந்துயர்தீர்ந்திலேனிமலனேயென்னென்று
நொந்துகூறலுஞ்சகலமுநீக்கெனநுவன்றுமீளவும்போனான்
தந்தைபோனபின்வற்கலைமுதலியசகலமுமறநீத்தான். (ச)

பானுமாமதிமுகிலுடுமுதலியபற்றறுசரற்கால
வானமொத்தனன்றமியனாய்க்கசன்சென்றுவனத்தின்மீளவுந்தா
யானவன்றனையெய்தினனன்பினாலடிதொழுதயர்வெய்தி [தை
யானணிந்துளவற்கலைமுதலியயாவையுமறந்தேன். (ரு)

யாதுநீத்துமென்பாலினைப்பாறிலேனினிச்செயலேதென்னத்
தாதைகூறுவான்மனத்தையேயுலகெலாஞ்சகலமென்றுரைசெய்வ
ராதலான்மனமகற்றுதல்சகலமுமகற்றுதலதனாலே
கேதநீங்குமென்றகன்றனன்மந்திரிகளர்கசனிதுசெய்தான். (சு)

சித்தமேதெனநாடினனதிந்திலன்றேகமாதிகளெல்லாஞ் [னச்
சித்தமன்றெனிற்குறைசெயாவிதனையான்றீர்ந்துமென்பயனென்

Koviloor Digital Library

சித்தமே தெனச்சுரர் குருவிடத்துறச்சென்றுகேட்டலுமன்னன்
சித்தமாவதுநானெனச்செப்புவர்சித்தத்தையறிவுற்றோர். (எ)

உயிர்களிவையாவையுமுள்ளுறநானெனவுன்னுபாவனைதானே
செயிர்செய்சித்தமென்றுரைத்தலுமிங்கிதுதீர்ப்பதுமிகவன்பாம்
வயிரமாவதுநீர்வதெவ்வகையெனமறித்துமந்திரிசொல்வான்
வெயில்செய்துன்பமோர்சிறிதிலையகங்கரம்விடமிகவெளிதாகும்.

அலர்கசக்குமுன்னிமைக்குமுனகங்கரமகற்றுதலெளிதாகும்
பலவுரைப்பதென்னேகமாயநந்தமாய்ப்பரமசித்தேயாகிக் [குன்
குலவுசுத்தமாய்வின்னிலுநுண்ணிதாங்குறைவிலாப்பொருணிற்
சலனமற்றதைப்பாவனைசெய்துபசாந்தனுயிடர்தீர்வாய். (௯)

சுத்தமித்தைபேபாதலிலகங்கரந்தொலைந்துபோமெய்யான
தத்துவந்தனைநினைதலாற்சித்திலேசாற்றகங்கரமெங்கே
மெத்துநீரிலேபுழுதியுங்கனலிலேமேவுதோயமுமுண்டோ
நித்தரூபத்தைநினைந்திவனுனெனுநிச்சயமறநிற்பாய். (௧௦)

திக்குங்காலமுமுதலியவசத்துறுசிறுவடிவறத்துன்பந்
தொக்கவன்னவற்றுன்மறைபாமலேசூக்கமாய்நொய்தாகி
மிக்கசோதியாயனைத்துமாயொன்றுமாய்மெய்யறிவொன்றேயாந்
தக்கவிந்நிலைநில்லெனவுரைத்தனன்றலைமையாமுபதேசம். (௧௧)

சீவன்முத்தனுநிலைமைபெற்றகங்கரந்தீர்ந்தெனதென்னுமன்,மே
வுமுட்பந்தம்விழ்ந்துபோய்ப்புந்தியில்விகற்பங்களனைத்தும்போய்ப்,
பாவமுற்றிபகசனின்றநிலையினிபற்றுதலறநிற்பாய், கேவலத்திந்த
வகங்கரம்பொய்ம்மையாங்கெடுத்தல்பற்றுதல்வேண்டாம். (௧௨)

பொய்யதாமுயற்கொம்பினைப்பற்றவும்போக்கவுநினைப்பாரா
ரையனேபரபோதபூரணத்திலேயயலொன்றுவருமாறென்
பொய்யதாகியவகங்கபாவனையினைப்பொருந்தல்புன்பிறப்பாகு
மையமின்றியவேகபாவனையினிலழுந்தல்பவந்தீர்தல். (௧௩)

கசன்கதை முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧அ௫ள.

Koviloor Digital Library

மித்தையா புருடன்கதை.

இருமையோடொருமைநீக்கிநின்றதிலெய்தியின்ப
மருவுவாய்மித்தையானபுருடன்போல்வருந்தவேண்டாங்
குரிசிலேயெனலுமெந்தாய்கூறுபொய்ப்புருடனோ
னொருபயனின்றித்துன்பமுற்றவனிலைந்தவாறென். (க)

ஞானமாமமுதிறைலேகலம்பெறநிறைந்ததேனு
மியானறிவுறவித்தன்மையியம்பெனவிராமன்கேட்ப
மானமார்வசிட்டன்சொல்வான்வள்ளலேநகைக்குமூல
மானவிக்கதையான்சொல்வதறவியப்புளதுமன்னே. (உ)

ஒருதலத்தேகாந்தத்திலுற்றசூனியத்திலுண்டாய்
மருவுமத்தலத்தினிற்போன்மாயையெந்திரமயத்தோர்
புருடனுண்டஞ்ஞானத்தோன்புன்மையாயிளமைப்பண்பாய்
மிருதுவாம்புந்தியுள்ளோன்கேவலமிகுந்தமூர்க்கன். (ரு)

வானிலேசுருண்டுதோன்றுமயிர்ச்சுருண்மருத்தலத்திற்
கானனீரொன்னவன்றான்றோன்றியேகலந்தபாழிற்
சூனியமலாதொன்றில்லையாதொன்றுதோன்றிற்றங்கே
மானவவதுவுமன்னன்மற்றவன்வளர்வுமாங்கே. (ச)

வேறு.

வேறுமாயேயெப்போதும்விளங்குந்தன்மையவன்கா ணான்
கூறுவானோர்சங்கற்பங்கூடினான்விண்ணினைப்பேணி
யூறுபடாமல்வைக்குதுமீதுயர்ந்ததேயென்றுளத்துன்னித்
தேறுமுவகையுடன்விண்ணைச்சேமிப்பானோர்வீடமைத்தான். (ரு)

அந்தமனையில்விண்ணினைவைத்தளிக்கின்றோமென்றதிலாசைப்
பந்தமுறலுமவன்வீடுபடர்காலத்தாலழிவெய்தி
யிந்தமருத்தாற்றரங்கம்போலிருதுமுடிவால்வருடம்போற்
சிந்தியொழியவவன்கண்டுசேண்போயினதென்றலறுற்றான். (சு)

கில்லாவீட்டில்விண்ணேயோரீயெங்ககன்றாயொருகணத்தி
லல்லாயானுயெனவீட்டினுகாசத்துக்கறப்புலம்பிப்

பொல்லாமனத்தான்மீண்டங்கோர்புதியகிணறுசமைத்தொருவர்
கொல்லாதிதனிலிருத்துமெனக்கூபாகாசபரனானான். (எ)

காலமதனாற்கூபந்தான்கழிதலோடுங்கதறுற்றான்
சாலவருந்திமீண்டங்கேதனைக்காப்பதற்கோர்குடம்பண்ணிக்
கோலமுடையதெனமகிழ்ந்துகும்பாகாசபரனானா
னிலமுகிலேயக்குடமுமிகழ்காலத்தாலுடைந்ததுவே. (அ)

நம்பிநம்பியடைந்ததெலாநாசமெய்தத்திருவிலியக்
கும்பவின்னாக்கழுததற்பின்குண்டமொன்றங்கேகெல்லித்
தம்பமென்றுதற்பரனாய்ச்சார்ந்தானந்தக்குழிதனையுந்
தும்பிகாலமழித்துளதாற்றான்னுமிருளைச்சுடர்போல. (கூ)

குண்டவின்னாக்கழுததற்பின்குலவுநாற்சாரகங்கட்டி
மண்டமெருள்கூர்தற்பரனாய்வாழ்ந்தானந்தமனைதனையு
மண்டமுழுதுங்கொல்காலமழிவுசெய்பவதற்கழுது
சண்டபவனவிடைப்பட்டசருகுபோலத்தளர்ந்துலைந்தான். (க0)

தடனார்நாற்சார்க்கழுததற்பின்றற்காப்பதற்கோர்குதிர்பண்ணி
யிடனார்குதிர்புக்கவவிருப்பவிதுவுங்காலவிறப்பித்தா
னுடனேகுதிர்விண்ணினாக்கழுதானென்றேவீடுகுதிர்குண்டங்
குடநாற்சாரமென்பவற்றாற்குறைவில்காலந்துயருற்றான். (கக)

விண்ணைவிட்டிலடைத்தவனாய்வீட்டில்விண்டான்றானாகி
யுண்ணவுற்றபெருந்துயராலுழைக்கும்பிழைக்குமோவொருகா
லெண்ணிநிற்பதிதுபோவதிதுவென்றறியானிவனென்று
புண்ணியத்தின்வடிவானோன்புகலவீரன்புகலுற்றான். (க௨)

பொய்ப்பாமனிதன்கதையாலென்புகன்றாய்மாயாபுருடனையே
யையாவிவன்விண்காத்தனனென்றறைந்ததேதென்றருள்கென்ன
மெய்ப்பாம்வசிட்டனுரைசெய்வான்மித்தியாபுருடனென்றவிவன்
மைபார்முகிலேசூனியமாம்வானிலெழுந்தவகங்காரமே. (கங)

இந்தவுலகெல்லாமிருக்குமிந்தவிண்ணோதநிறைவுற்
றந்தமின்றிச்சிருட்டிதனக்காதிதனிற்றானேநிற்கு
மைந்தவதன்பாலகங்காரமருத்திற்பரிசம்வருவதுபோன்
முந்துதோன்றித்தனைக்காக்கமுயன்றான்வடிவாய்முளையாதோன்.

Koviloor Digital Library

கூவங்குண்டங்குடகாற்சார்குதிரென்பனவாங்குரம்பைகளே
மேவகாநாவிதமாகவிதித்துமீண்டுமீண்டிழந்து
தாவமுற்றுனுடறேறுந்தனைக்காத்தனனென்றுகாச
பாவனைக்கேகிலேப்பட்டான்பாழேவருந்திப்பதைத்தனனல்.(கரு)

விண்ணனென்றேசேமித்துவிட்டாகாசமாதிகளி
னண்ணுமெலிவுற்றிடுமித்தையான்போல்வருந்தாதொழிகமலர்க்
கண்ணவின்னின்மிகப்பெரிதாய்க்களங்கமற்று நுண்ணியதா
யெண்ணலடங்காவழிவில்சிவமியலாத்துமதத்துவந்தானே. (கசு)

அவ்வாத்துமதத்துவங்காணலாமோவெவர்க்குமகப்படுமோ
விவ்வாறிருக்கவுடலிறந்தாலிதயாகாசமாத்திரத்தை
வெவ்வாளரசேகானிறந்தேனென்றுமெலிவர்விவேகமிலோர்
தவ்வாவிசும்புகடாதிகடான்றகர்ந்தபோதுதணந்திடுமோ. (கஎ)

கடமதுடைந்தால்விண்பிரியாகாயமழிந்தாலுயிரழியா
தடவிதாஞ்சின்மாத்திரமாய்ச்சத்தாய்விண்ணினுண்ணியதாய்த்
தொடருமணுவுக்கணுவாகுஞ்சொருபமைந்தாநானென்று
படருமனுபூதியினளவேபயிலுங்குடம்போனசிந்திடுமோல். (கஅ)

யாதுமென்றுமெவ்விடத்துமிறத்தல்பிறத்தலிலதாகு
மோதும்விவர்த்தரூபத்தாலுலகாய்ப்பிரமமேவளரு
மாதலாவிவ்வுலகெல்லாமடியுமுடியுநடுவுமறப்
பேதமறப்பாவாபாவம்பிறவாப்பொருளென்றிடர்தீர்வாய். (ககூ)

ஆபத்துக்கெல்லாநிலயமநித்தமவசமவிவேகம்
பாவத்துக்குழுதன்மடமைபவவித்தழிவைப்பற்றியது
தாபத்துக்கோரிடமானதகவிலகங்காரந்தன்னை
நீபற்றில்லாவறிவாலேநீக்கிலதுவேநிமலநிலை. (உ0)

மித்தையாபுருடன்கதை முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-கஅஎஎ.

Koviloor Digital Library

விரதத்திரயகதை.

ஆதலாற்காண்பவற்றினுண்மையிலையிப்படியேயறிவில்வையம்
பேதமாய்வேறென்றிற்பிறந்ததிலைக்கயிற்றிலராப்பிறப்பதேபோ
லாதபனில்வேறிலையாதபமென்றேபாவித்தோர்க்காதபந்தான்
பேதமறவாதபனும்பேனுநிருவிகற்பமிதுபேசுங்காலே. (க)

பொன்னில்வேற்றுமையன்றுகேயூரமெனநினையிற்பொன்னென்றே
மின்னதேநிருவிகற்பமென்பராலிரவிவெயிலென்றுநாடின் [யா
மின்னுகதிரிரவிக்குவேறுபோலாங்கண்டாய்விவிதமாகத்
தன்னுநாநாத்துவம்விட்டறிவதிலாநல்லறிவிற்றுணிந்திருப்பாய்.()

சங்கற்பமெனும்புராணசத்தியினைத்தற்பரமந்தானேதன்னாற்
பொங்குற்றவாயுவலைவைச்செய்புமாறுபோற்புரிந்தபோது
சங்கற்பவிரிபுருவாயயல்போலாய்ச்சகவடிவாய்த்தனைத்தானுடிப்
பொங்குற்றமனமாகுஞ்சங்கற்பமயமாமிப்புவியைக்காண்க. (ந)

தெரிபொருளென்றுளதல்லப்பொய்யுமலசொற்பனத்தின்றிரள்
போற்றென்றுந், தெரிபவன்கேட்போன்சொல்வோன்பரிசிப்போ
ன்மணங்கொள்வோன்செல்வோன்மீள்வோன், புரிவனவெல்லா
ந்தானேபுதிதாகுமலவெல்லாம்பொருளென்றேர்வாய், புரிதருநி
ன்றொழிலெல்லாமல்மறுசின்மாத்திரமாம்பொருளேகண்டாய்.(ச)

பெரும்பெரியவடிவானபிரமமேயாதலாற்பிறிதொன்றில்லை,வரு
ம்பொருளெல்லாமறிவின்கனவையாயிருத்தலிவ்வையமெல்லாங்
கரும்புயலேயறிவேயாங்கற்பனைவேறில்லையாற்காணப்பட்ட, வரு
ம்பொருள்கடனிலறிவுண்டாதலினலறிபொருளாமனைத்துமில்லை.

ஆதலினாற்பந்தம்விடெங்குளதுவிடிதெனவடுத்தபந்த, மீதென
வென்னுவதெல்லாம்வலிந்தகற்றியபிமானமிறையுமின்றித்,நிறுத
வீர்மௌனியாய்ப்பொறிவென்றுமானமதந்தீர்மேலோனு, போதி
யின்காரியஞ்செய்திராமனேயகங்காரமொழிந்திருப்பாய். (ரு)

மோகத்தில்வருமையமெல்லாம்போயறுதிநிலைமுற்றும்பற்றி, மா
சுத்தன்மாபோகிமகத்தானதிபாகியாய்வாழ்தியென்ன, மேகத்தை

Koviloor Digital Library

நிகர்வள்ளலிம்மூன்றுகுணங்களைவிளம்பாயென்ன, யோகத்தையுணர்முனிவனக்குணமூன்றையுந்தோன்றவுரைக்கலுற்றான்.

மூன்றுவகைவிரதமெனுமிதுதன்னைப்பிருங்கிசன்மோகம்போக, வேன்றுபரம்பொருளறியும்விருப்பினாலேமகிரிவடகோடெய்தி, வான்றுணையாஞ்சங்கரனைத்தொழுதிறைஞ்சியிப்பிறவிமயக்கைநோக்கித், தோன்றுணர்விலாறுதலில்லாமையினான்மோகித்துத்துவண்டேனென்றும். (அ)

இச்சகமாம்பழங்குடிலிலிளைப்பாறிநான்றிரிவதெங்ஙனென்று
மச்சமறுநிச்சயமாமொழுங்கையருள்வாயென்றுமன்பாற்கேட்ப
நிச்சயமாயரனருள்வானையமெலாமறுத்தறுதிநிலைமைபற்றி
மெச்சியமாகத்தன்மாபோகிமாத்யாகியாய்விடுவையென்ன. (கூ)

செப்பியவிம்மாகத்தன்மாபோகிமகத்தானதியாகியென்ற
விப்பரிசுவிளங்கவருளெனக்கேட்டபிருங்கிசற்கீசன்சொல்வான்
வெப்பமுறுமிராகமுனிவின்பமிடரறம்பாவமிகுமிவற்றின்
றப்பில்பலாபலமிவற்றில்விருப்பமறச்செய்வோனேதனிமாகத்தன்

மோனமுறவகங்கரமுமானமுமச்சரமும்போய்முடிவிவாடா
தீனமிலாதனசெய்வோனெங்கணுமன்பறச்சாட்சியெனலாயிச்சை
தானறவேகாரியஞ்செய்வோன்வெருட்சியானந்தந்தாக்குறாதோ
னனசமனுய்த்தொழிலாலிடர்சுகங்களுதயமுறாதவன்மாகத்தன்.

சனனத்தின்மரணத்திலுதயத்திலத்தமனத்தனிநேராகி, மனமொத்தோன்மாகத்தனெனத்தெளிவாய்மாபோகிமரபுகூறிற், சினமுற்றோன்றினைநீக்காதென்றைவிரும்பான்பகுதிசேரத்துய்ப்போன்,வினவுற்றமாபோகியிவன்பெருமைமீளவுநாம்விளம்பக்கேளாய்.

மிகவெருவலானந்தமில்லவாய்மயக்கமேவிளைப்பதான,சுகமிடர்கள்புசித்தவற்றாற்கலங்காதோன்சுரர்மரணந்தொடருமாபத், தகலரசுமிடிகளுநன்றெனப்புசிப்போன்புளிப்புக்கைப்பழற்சியுப்புப்,பகர்நிறைவுகுறைவுசமமாய்ப்புசிப்போன்மாபோகிப்பான்மையோனே

உப்பினியல்பெனநன்மைதிமையிரண்டிலுஞ்சமமாயொத்துநிற்போன், றப்புறுமாபோகியாமகத்தானதியாகிகுணஞ்சொல்லக்கேளாய், தப்பிலறம்பாவமிடர்சுகமரணஞ்சனனமெலாஞ்சேரத்தள்ளு

Koviloor Digital Library

ஞ், செப்பமுளபுர் தியுளோன்மகத்தானதியாகியெனத்தெளிந்து கொள்வாய். (கச)

அனைத்தாசையனைத்தையமனைத்தாளதொழிலனைத்தாமறுதியா வுர், தினைத்தாளுமேவாதபுந்தியோன்றன்னைமகத்யாகியென்ப,வெ னைத்தானவறம்பாவமனமனைத்தொழிலிதபத்தெல்லாந்தீர்ந்தோ ன்,வினைத்தாயபிருங்கிசாமகத்தானதியாகியெனவிளம்புமன்றே.()

தெரிபவற்றிலென்னமாப்க்காணுமிவையெவ்வளவத்திரள்க ளெல்லாங், கரிசறநன்குப்விட்டோன்மகத்தானதியாகியெனக்கரு ணைமீச, ஞரியபிருங்கிசனுக்குமுன்னுளோதினனிந்தவுயர்ந்தநோ க்கைப், பரிசயமுற்றுப்பிடித்துத்துபொழிவாயுலகளிக்கும்பதும க்கண்ணு. (கரு)

நித்தமுறுமுத்யமுளதாதியாகுவதாந்தநிமலமேக
மத்தகையபிரமமேயுளதுவிகற்பத்தென்னமயலொன்றில்லை
யித்திறமென்றேபாவித்தழுக்கிலனுப்சுகமேவியிபற்றுஞ்செய்கை
சுத்தவிமலச்சார்ந்தமுறவெல்லாமேவுவாய்சுத்தவீரா. (கள)

திங்கிடர்தீர்பிரமமாய்க்கற்பனையெல்லாமேவிச்செய்கைக்கொன்று
போங்கியவித்தாய்ப்பரமரூபமாய்ப்பெரிதாகியுயர்மகத்தாய்
விங்கியபாவனையெல்லாநிறைவதாப்மெய்ஞ்ஞானவிராகிஞ்சி
லிங்கிலதென்றுரைப்பதாமாகாயமேததுவேயென்றுமுண்டால். ()

அன்னியமாவோரிடத்தில்துகிஞ்சிலெனவென்றுமசத்துஞ்சத் துந், தன்னலுறுதென்றுள்ளேதிடனிலையாயகங்காரந்துடைத்துவி ற்பா, யுன்னுள்ளேமுகமாகிப்புறத்தின்வருவனவெல்லாமொருங்கு செய்து, பின்னுதொழிலிடர்மேவாதருவமிலாவகந்தையைநீபிரிய வென்றான். (கஅ)

வீரதத்திரப்கதை முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கஅகூசுா.

Koviloor Digital Library

இட்சுவாகுகதை.

தருமமெல்லாமுணர்முனியேசாற்றுமகங்காரப்பெயரை
மருவுமனந்தன்வடிவிருக்கமாய்ந்தாலந்தவுண்மைக்குப்
பெருகுகுறியேதுரையெனவெம்பெருமான்கேட்பமுனியுரைப்பா
னுருவமிருக்கமனமிறந்தவுண்மைக்குள்ளகுறிகேளாய். (க)

அழுந்துவசத்திலிருப்போனையம்புயத்தினீர்போல
வெழுந்தலோபமோகமுதலெக்குற்றமும்வன்புறநலியா
முழுந்துமுதிதைமுதற்குணங்கண்முகத்திலழகாய்ச்சிறிதகலா
விழுந்துபாவமெல்லாம்போமிருவாதனைக்கட்டறுமெல்ல. (உ)

வேகந்தேயுமுலோபகுணமெலியுங்காமவினையடங்கு
மோகம்போயெங்கொளித்திடுமோமுடுகிக்கிளராதைம்பொறிகள்
சோகந்தாவியடராதுசுகமுமேவிட்டெழமாட்டா
தாகந்திரக்குளிர்ந்துள்ளேசமந்தோன்றிடுமாலெவ்விடத்தும். (ங)

துன்பமின்பமெலாமுகத்திற்றோன்றுமெனினுந்தோன்றிடுக
வன்பிலவைநெஞ்சினைநலியாமனமேயிறக்கில்வானேரு
மன்பினயப்பர்நலனுண்டாமாங்கேசமமாமதியுதிக்கு
மென்புகுளிருஞ்சாந்தியெழிலெய்துந்தடைதீர்பெருமையுறும். (ச)

பணிதலொளிர்தனெய்மையுறும்பழுதிலமலவடிவுண்டாம்
பிணியில்பெரியோர்குடும்பமயற்பெரிதாய்ப்புதுமைத்தானுலுந்
தணிவில்பாவாபாவத்தாற்றள்ளூற்றாலுமின்பமிடர்
கணிதமெனினுஞ்செயமாட்டாகருணைத்தடங்கட்கருங்காரே. (ரு)

புந்திப்பார்வைக்கெட்டுவதாய்ப்புகலாபத்தெல்லாமிறந்த
விந்தப்பொருளைமோகத்தாலெய்தாதவர்சிசியிழிந்தோர்
தொந்தஞ்சிரகாலப்பற்றாற்றோன்றுதுயராமணிகள்செறி
பந்தப்பிறவிக்கடல்கடக்கும்பான்மைநயந்தோர்நெறிகேளாய். (சு)

ஊனார்பிறவிக்கடல்கடப்போர்க்குரியவிளைப்பாறுதலெய்த
நானுரிந்தச்சகமெங்ஙனுடும்பரமனுராகு
மானுவிடயபோகத்தாலாவதென்னேவென்னுமதி
தானும்பரமவுபாயமெனச்சாற்றுங்கண்டாய்சற்குணனே. (எ)

Koviloor Digital Library

எற்றமுளதுகுலமுதல்வனிக்குவாகுவெனுமன்ன
னாற்றலுயர்விடலைவுற்றவலைவுகேளாயருள்வேந்தன்
றேற்றமுடையதன்புவனந்தொல்லைநெறியினடத்திடுநா
னாற்றமுடையவுளத்தாலேயொருவன்றானேயிருந்துணர்வான். ()

சனாசாவின்பதுன்பங்கடளர்மோகங்கண்மயக்கங்கள்
வனையாநிலையாய்க்காண்பனவுமட்டிலாதசகத்துக்குப்
புனைநிர்மூலமேதென்றுபுரிந்துநினைந்தான்பூபால
னானைசாருவகின்மூலத்தையுன்னாநின்றுமுணர்ந்திலனால். (கூ)

அபனாட்டிறும்வந்தடைவுற்றவாதிமனுவாம்பகவனைக்கண்
டியலாற்பூசித்தருட்செல்வாவின்றுநீயிங்கெளிதெய்தி
முயல்வாலளித்தநின்னருளான்மோகந்தீர்ந்துநிலைநிற்கும்
பபனாலென்னையருளென்றுபரவியரசனுரைசெய்வான். (க0)

எங்குநின்றுவந்துளதிச்சிருட்டியிதற்கெப்படியுருவ
மங்குமுலகமெம்மட்டுமேற்றுருடையதேதுகால
மிங்கிதெதனாலெனவுணர்த்திபேறிக்குறைந்தவிப்பிறவிப்
பொங்குமயக்கைவலைபகலும்புட்போனீங்கும்வகைபுகல்வாய். ()

என்றலோடுமேறப்புதிதாமெண்ணில்காலத்தோடேநீ
துன்றுவிவேகவிசாலத்தாற்சொன்னவினாவேவிதிப்பொருளைப்
பொன்றுவிக்குமென்றுமறுப்புகல்வான்சிறிதாக்காணுமிவை
யொன்றுமில்லைக்கந்தர்ப்பவூர்போன்மருப்பூமியிற்சலம்போல் (கஉ)

கிஞ்சில்காரணங்களுக்கெட்டாக்கிளர்வானிலுஞ்சற்றாய்முடிவி
லெஞ்சலிலதாமழிவின்றியிருந்ததென்றுமான்மாவாம்
விஞ்சுமந்தப்பெருங்கண்ணாடியிலேநேயவிரிவிடய
பஞ்சபூதசிருட்டியெலாம்பத்திபாய்ந்துவிளங்கிடுமால். (கங)

பிரமத்தினவர்பொளியுருவாய்ப்பிறந்துபிறங்குஞ்சத்திகடாம்
விரவிப்பிரமாண்டத்தினதுமேனியாகிநின்றசில
வுரவுபலபூதத்திரளினுருவமாகிநின்றசில
சுரர்பொற்பதியாய்நின்றசிலதோன்றுசகத்தினிலையிதுவே. (கச)

பந்தமில்லைவிடில்லைப்படர்நிர்பிரமமேயுளதா
மந்தவயிக்கியமில்லைபிரண்டில்லைபறிவேவளர்ந்தெழுந்த

Koviloor Digital Library

சிந்துதரங்கப்பங்கத்தாற்றிகழுகின்றநீர்போல
வந்தமில்லாவறிவுருவேவிளங்குமயலொன்றிலதாகும். (கரு)

பந்தமுத்திநினைவுகளைப்பயிலாதோட்டியுன்வசமாய்
முந்துபிறவிப்பயமெல்லாமுற்றுமொழித்துநிலைநிற்பா
யந்தநீசங்கற்பநினைவடைந்தாற்சின்மாத்திரவறிவு
வந்துசிவத்துவமடைந்தவாரியலையாவதுபோல. (கசு)

ஆதிகாலத்தெழுந்தபவத்தனையசீவருழல்கின்று
ரோதுமின்பதுன்பமயக்குளத்துக்கொழிய*வுனக்கில்லை
மீதுதெரியாவிராகுமதிமேவித்தெரிதல்போலவறு
பூதியளவாமுயிர்காணும்பொருளாற்காணப்படுமென்றே.(கஎ)

கலைகளாலுங்குருவாலுங்காண்டற்கரியபரன்றானே
தலைமையானசாத்திகஞ்சேர்தன்புந்தியினாற்றன்னாலே
நிலையில்வெளியாநெறிபோவார்நெறிசேர்காட்சிகளிற்புந்தி
செலவுபற்றில்லாததுபோற்றெவ்வாங்கரணங்களைக்காண்பாய்

இனையகரணங்களைப்பற்றலிகழ்தலிரண்டுமியல்பல்ல
வினைசெயுடலமுதற்பொருள்கண்மேவுமியல்பின்மேவிடுக
வனையபொருள்கள்புந்தியினாலகலநீக்கியதிசிதம்
புனையுட்கரணத்தினாலெப்போதும்பரமமயமாவாய். (கக)

உடலானென்னும்புந்திபிறப்புற்றகட்டாமொருக்காலு
மிடர்தீர்வீடுவிருப்புறுவோர்க்கியல்பன்றாகுமிப்புந்தி
திடமாங்கிஞ்சின்மாத்திரமுமில்லாச்சின்மாத்திரவடிவன்
றடவானிலுநானனுவென்னுஞ்சமமாம்புந்திபிறப்பறுக்கும்()

தெளியுநீரிலுட்புறம்புசெறியும்வெயில்போற்பொருளனைத்தி
லொளிகொளான்மாநின்றிடுமோலுருவமெல்லாமுட்புகுந்து . [மா
வெளிசெய்பணிக்டொறும்பொன்னின்விசித்திரம்போல்விளங்கிடு
லளியவஃதல்லாவுருவாமான்மாவுடையசகமாதி. (உக)

நாசவடவைக்கனல்படாநடுக்கஞ்செய்யுங்காலமெனு
மூசுகடலிற்சகத்திரளாமுடுகுநதிகள்பல்லுயிராம்

---

* உயிர்க்கில்லை என்றும் பாடம்.

Koviloor Digital Library

விசுதாங்கத்தொடுபோய்த்துகிறையாதந்தவேலையையு
மாசமனஞ்செய்யகத்தியனுமான்மாவென்றுவகத்துணர்வாய் (உஉ)

தானலாதாப்முன்சொன்னசகத்தின்றிரளாயுடலமுத
லானபொருளின்சாலத்தையான்மாவென்பதறத்தள்ளி
ஞானசற்பாவந்தன்னைநனிமேற்கொண்டுமறைந்தோனு
யினமில்லாமதிவேந்தேயிச்சையானபடிநிற்பாய். (உங)

தனங்களூடேதுயின்மகவைத்தாய்தான்மறந்துமிகத்தேடி
மனங்கன்றுதல்போற்சராமரணமருவாதம்மையறியாமற்
செனங்கள்சலித்துக்கெட்டேனென்செறியுநாதரிலாதவனு
னனங்கொள்காயம்போமளவிலழிந்தேனுவாவென்றழுவார். (உச)

வாரியலைந்தவலையில்பலவடிவாமதுபோற்சங்கற்ப
பேரினுலேலெகிற்பிரமகோடிதுவிரியுஞ்சங்கற்ப
பாரகளங்கமறவிட்டுப்படர்ந்தவறிவையான்மாவிற்
றீரகிருத்திச்சந்தேகத்திறங்களெல்லாந்தீர்ந்தோனுய். (உரு)

அலைவிலலையாதுபர்பரமவான்மாப்போலநிலைநின்று
நிலைகொள்சுகிபாயிவ்வரசுகேடிதுபுரப்பாய்நிருபதியே
தலைமையான்மாதன்னிடத்தேதன்னதானவலைசவுகளாற்
றொலைவிலாதவிளையாட்டைத்தொடர்பிற்செய்யும்பாலனைப்போல்

அழிக்குந்தன்சத்தியினுற்பின்னழித்துத்தன்பாலமர்ந்திடுமோ
விழிக்கும்பந்தமுறுஞ்சத்திதற்குத்தன்பாலெழுந்தானே
பழிக்கும்பந்தமெப்படியோபற்றற்றகலுமப்படியே
பொழிக்குஞ்சத்திதானைவந்துதயமாகுமிவனுக்கே. (உஎ)

மதியோடிரவிகதிர்வன்னிமணிகளிற்சேரொளிகளைப்போன்
முதிருமரங்கள்கனியிலைமுதலாயினபோலருவிகளிற்
பிதிருந்துளிகள்போற்சாலப்பிறங்கும்பிரமத்திடைதோன்றுங்
கதிகொள்புத்திமுதலாகக்கற்பிதஞ்சேரிச்சகமே. (உஅ)

அருதானறியார்க்கிடர்கல்கியதுவேயதுவல்லாததுபோற்
றிதமாய்நிற்குமிம்மாயைச்சித்திரந்தானற்புதமே
போதுவாயங்கமத்தனையும்புணர்ந்துபிறிவற்றிருந்தவுந்தா
னிதமாயுயிரையுயிர்காணுதிருக்கமயக்குமியானையுமே. (உகூ)

Koviloor Digital Library

பரமவின்னே சகமெல்லாமென்றுபாவித்தாசையறிற்
பிரமகவசனின்பமுளபேரியோனுகுரானென்னும்
பொருளீக்கிகினைவின்மைவடிவாகினைவாற்பொருளனைத்து
முருவமில்லைநிராலம்பமுணர்வுசாந்தமெனநினைவாய். (௩௦)

இதுவேகன்றிதன்றென்னுமிதுவேவித்தாமிடமொழுங்குக்
கதுதான்சமமாமங்கியில்வெந்தழிந்தாலிடருக்கவசரமென்
பொதுவாகலந்தீங்கெனும்பேதமபாவமென்னும்பொருவாளால்
விதமாம்புருடவருத்தத்தான்மெல்லமனதில்வெட்டுதியால். (௩௧)

நினைவான்முடிக்குங்கருமமெனுநீண்டபெரியவன்காடு
தனைநீகினைவின்மையினாலேதடிந்துபரமபதமேவி
வினைதீருனதுவிவேகத்தைமேவியென்றுநிலைநிற்பாய்
புனைதாரிக்குவாகுவெனும்புகழானிறைந்தபூபதியே. (௩௨)

உலகின்பரப்பையுள்ளாக்கியுன்னுநினைவுக்கப்பாலாய்க்
கலகமடவார்பொருளென்னுங்காதனமூவிகானென்னுங்
குலவுமிருள்போய்விவேகநிலைகூடுமெவனேபராகந்த
மிலகவடைந்தோனெடுங்காலமிவனேதுன்பமில்லாதோன். (௩௩)

சாந்தனுகிச்சமநிலையாய்ச்சாலநொய்தாயறிவுருவை
வேந்தனேசந்தநினைவாயென்றுமனுமீண்டுரைசெய்வா
னுய்ந்தநூலானல்லோராலறிவைவளர்க்கவேண்டுமுத
லேய்ந்தயோகத்துக்குமுதற்பூமியிதுயோகிக்கில்லை. (௩௪)

அயர்வில்விசாரமிரண்டாகுமசங்கபாவமூன்றாகும்
பயிலுநாலாம்விலாபினியேபடர்வாதனையைப்பற்றறுக்கு
மயர்வில்சுத்தநல்லறிவின்மயவாநந்தவடிவைந்தாந்
துயில்சாக்கிரம்பாதிகளில்லாத்தொடர்சிவனின்முத்தியுமிதுவே()

அறிவிலாமைவடிவாகியகலாநந்தமொன்றாலுஞ்
செறியும்வடிவாய்ச்சுழுத்தியைப்போற்றிகழுமாறுமுயர்பூமி
பிறிவில்சம்மாயறநொய்தாய்ப்பெரிதுஈன்றாய்ச்சாந்தமதாய்
வெறியதுரியங்கேவலமாம்வீடேயேழாம்வியன்பூமி. (௩௬)

மன்னுவிடயம்விடுதலினால்வாழுமிவ்வேழாம்பூமி
தன்னைநிருவாணத்துருவாய்ச்சான்றதுரியாதீதபத

Koviloor Digital Library

மென்னவுரைத்தார்சிலர்வேறேயிவ்வேழவத்தைகளின்முன்னஞ்
சொன்னவவத்தையொருமூன்றுந்தொடர்சாக்கிரமாக்கருதுவதாம்.

சகங்கள்கனவிற்றோற்றவாந்தன்மையாலாவதுகனவா
நிகழாகந்தமொன்றாலுநெருங்குவடிவமைந்தென்று
புகன்றவவத்தைசுழுத்தியதாம்போதமின்மைவடிவாகித்
திகழ்ந்தவாறுமவத்தையினைச்சிறந்ததுரியமெனலாகும். (௩௮)

தரியாமனவாக்கெட்டரிதாய்த்தனதேசுண்மைவடிவான
துரியாதீதப்பதவவத்தைதூயவேழாமுயர்பூமி
பிரியாதுள்ளேவசமானபிரத்தியாகாரத்தாலே
தெரியாதாகிக்காண்கின்றதிரள்களைத்தும்போமாகில். (௩௯)

அந்தமகாசத்தையினாலேயவனேமுத்தனையமிலை
வந்தபோகசுகதுக்கவகையாற்றாக்காதறநிறைந்த
புந்தியுளனாயான்மாவிற்பொருந்திமகிழ்ந்துநிற்குமெனி
லிந்தமனிதனிலைதானேயிங்கேதோன்றுமுயர்முத்தி. (௪௦)

பொங்குதொழின்மேவினன்சாந்தன்புகல்வீட்டுறைவோன்சங்யாசி
யங்கமுள்ளோன்சரீரமிலோனெனினுமவனேமுனியாகு
மெங்குமிறவேனுயிர்வாழேனிலனுமுளனுமலனிவனே
தங்குநான்கிஞ்சிலுமிலனென்றுன்னித்தீரன்றளர்வனாகான். (௪௧)

ஒன்றிலனாகேனான்சனைபற்றுள்ளமமதையகங்கார
மென்றவொன்றுமிலனென்றேயெண்ணித்தீரனிடரனாகான்
றுன்றுகுணமூன்றிலன்சனைசாவிலனான்சுத்தன்றாவறிஞ
னின்றசாந்தன்சமரசனானென்றுமினைத்தோன்றுயரனாகான். (௪௨)

திரணநதிகள்விசும்பிரவிதேவருரகர்நரரிடத்தில்
விரியுமதிவேகானென்றுவிளங்குந்திரன்மெலிவனாகான்
புரியுங்குறுக்குமேல்கீழென்போதப்பெருமையுலாவியதென்
றரிதினகந்தவிசாரஞ்செய்ததனையறிந்தோனழிவில்லோன். (௪௩)

திரவாசனையோடெப்பொருள்களனுபவிக்கச்சேர்ந்துளவோ
தரிசிலதுவேசுகஞ்செய்யுஞ்சுகமேதளிக்குமதுவிளைவில்
வெருவுகாலத்தானசிக்குமதனாற்றுன்பம்விளைபொருட்டாம்
பெரியசுகதுக்கங்களுக்குப்பிரிவற்றிருக்கைபிரசித்தம். (௪௪)

Koviloor Digital Library

நிருவாசனையினாலுநேர்வாசனையினாலும்
பொருள்தானடையினதனாலேயின்பதுன்பம்பொருந்தாவாம்
வரும்போதிரண்டுமொன்றாகவந்துவிளங்குஞ்சுகதுக்க
மருகாநின்றநாசத்திலவைகளிரண்டுமடங்கிடுமால். (௪௫)

புந்திதனிந்தவாசனையாற்புரிகாரியமீண்டங்குரியா
வெந்தவினைதயினுடல்கரணமுதலவெவ்வேறாய்விரிந்து
நந்துகருமகாரணங்களூட்டுமொருவன்செய்வோன்றான்
முந்துபுசிப்போன்றானெவனேமுன்வந்தடைவனவ்விடத்தே(௪௬)

பாவிப்பனயாவையினுமுளம்பற்றாதுயர்ந்தோன்றாகையின்
றேவிற்குளிர்ந்துநிறைந்தொளிர்வன்செய்யகதிரோன்றன்கதிரின்
பூவிற்றொழிலினாலந்துழலும்பொத்தவுடலாமிலவுதனை
மேவுதொழிற்பஞ்சோடிப்போஞானக்காற்றால்விரைந்தொருபால்.

எண்ணமெல்லாம்பழகாமையாலேயிறக்கும்பிறப்போர்க்குக்
கண்ணதானவிஞ்ஞானக்கலைதானொருகாற்றோன்றிடினும்
பண்ணுநல்லகழனிதனிற்பயின்றவித்துப்பலிப்பதுபோற்
றிண்ணமானவன்பாலேமிகவும்வளருஞ்சிறப்பாக. (௪௮)

முழுதுவடிவமாயொன்றாமான்மாமுழுதுசத்தியினுங்
கெழுமுநதியிலுவரிகளிற்கீலாலம்போனின்றொளிரு
மொழிவினிலைவின்பரப்பிலதாயொன்றுஞ்சற்பாவந்தன்னிற்
றழ்வுகூறுமாத்திரமாயுணர்வாய்சகலசகங்களையும். (௪௯)

என்றுமனுமீண்டுரைசெய்வானியைந்தபுலன்போகத்தாசை
நின்றதெம்மட்டம்மட்டுநிகழ்சீவப்பேர்பெறுமான்மா
வொன்றுமவிவேகத்தாலவ்வாசையுண்டாந்தன்னாலே
யன்றுநிருபாவிவேகத்தாலந்தவாசையழிவெய்தும். (௫௰)

காதலென்றுபோமன்றுகலந்தசிவத்திறம்விட்டுத்
தீதிலாதபரப்பிரமத்திறத்தையான்மாசேர்ந்திடுமாற்.
கேதமாகமேனின்றுங்கீழேயெய்துங்கீழ்நின்று
மேதமில்லாமேலேசென்றெய்துநெடுநாளிவ்வான்மா. (௫௧)

கனமார்பிறவிப்பெரும்பூட்டைக்கருத்தாங்கயிற்றிற்கடமாகே
லெனநீதிதற்குநானென்றேயிறுகும்பிராந்திவிவகார

கனிமோகத்திற்செறிபவரியாரந்தகவைசேர்வஞ்சகரோ
தனிவென்மன்னுகிழ்கின்றுங்கிழேசரிக்கத்தக்கவரோ. (௫௨)

இதற்குஞானிதெனக்கவன்மற்றிவனுனெனன்றிடுமோக
விதத்தையுபர்புத்தியினுலேவிட்டோர்மேற்குமேற்செல்வோர்
திதத்தனெளிகூரான்மாவைச்சிறிதுத்தாழாதுறப்பற்றி
யுதித்தசகத்தைத்தற்புரணவுருவமாகநோக்குதியால். (௫௩)

என்றிப்படிதன்சித்துருவமிரண்டற்றுள்ளேதனித்தோன்று,மன்றிப்பவம்போயப்பரமேசனுகலாகுமயன்சிவன்மால், வென்றிக்குலிசத்தவன்முதலோர்செய்தவெல்லாமெய்ம்மையினு, லொன்றிச்செறிசித்துருவுடைநான்செய்கின்றேனென்றுணர்வுறுவாய். (௫௪)

யாதிபாதெப்பொழுதெதிர்ந்தவற்றிலென்னேசொலப்பட்ட
தோதுமவையெல்லாந்தடைதிருணர்வின்விலாசமேநன்குந்
திதிலறிவுமாத்திரமாந்திறனுப்காலச்செயம்பண்ணிக்
கோதின்மனத்தோடிருப்பவன்சேர்குறைவில்சுகத்தோடெதுகிகோ

இல்லதன்றுண்டல்லவழிவில்லாவுருவிலறிவுருவ
மல்லவான்மவுருவமலவயலன்றுலகமெனநினைவாய்
சொல்லுமிந்தச்சொருபமுறத்தொடர்ந்தபகுதிபோயிறக்கும்
புல்லுதேசங்காலமலபுறத்தோர்நிலையன்றுயர்முத்தி. (௫௬)

அகங்காரத்தினகமென்னுமோகமழிந்தாற்பாவனையா
மிகும்பேர்பெற்றபகுதிபந்தமேவுமிதுவேவிடாகுந்
தொகுஞ்சாத்திரத்தின்பொருணினைவிற்றுவள்வுநாகாவிதவின்பம்
புகுங்காவிபவேட்கையுமனைத்துவிகற்பத்துயரும்பொருந்தாமல்()

அன்னன்சமமாமழிவில்லாவான்மாவாய்நின்றின்பமுறு
மென்னுகினுமொன்றுடுப்பவனுமென்னுகினுமொன்றுண்பவனு
யுன்னுதெங்காகினுமொருபாலுறங்குவோனுயாங்கவனே
பொன்னுர்பூமிமுழுதாளும்பூபாலனைப்போற்பொலிவுறுமால். ()

வருணச்சிரமவாசாரவழிநாளடத்துநடைநீங்கி, யருகாவுலகின்வலையகன்றேனருங்கூடகன்றகேசரிபோ, னிருபாவுணாகட்கெட்டரிபோனேடிப்பிறக்குநிலைநீத்தோ, னெருசோபையைச்சேர்ந்தவன்மழைபோபொளித்தாளில்விண்டலம்போல். (௫௯)

Koviloor Digital Library

தெளிவுகெம்பீரங்கள்கிரிசேர்ந்தபெரியசுனைபோல்வன்
களிகொள்பரமசுகச்சுவையார்தன்பாற்றானேகலங்காம
லெளிதுசுகிப்பன்கருமபலமெல்லாம்விட்டோனழிவின்றி [ன்.()
யொளிருநிறைவோனிருவினைவேறொன்றுந்தாக்கானென்றனுகா

பத்திபாய்ந்துட்பற்றாதபளிங்குபோலக்கருமபலம்
பத்திபாய்ந்துட்பற்றாதோன்பலர்ண்மனிதருடனுறைந்தும்
பத்தியாலர்ச்சித்தாலும்பங்கையாலுடலையரிந்தாலும்
பத்திபாச்சலுற்றதுபோற்பயிலுமகிழ்வுதுயரறியான். (௬௧)

துதிகள்கடவுளோமங்கடொடர்பூச்சியன்பூசைகளில்லோன்
விதிசெய்நீதியாசாரமேவப்படுவோன்மேவாதோ
னெதிருந்தன்னாலுலகோர்களிறையும்வெருவாவகையிருப்போ
னுதிதமானவுலகத்திலொன்றால்வெருவாதுறைகிற்போன். (௬௨)

பற்றுமுனிவுபய்ஞ்சுகங்கள்பயிலானெனினும்பயின்றிடினுஞ்
சொற்றவெவர்க்கும்பிரமேபந்தொடரானெனினுநன்பாலர்
பெற்றபிரமேயத்துறினும்பெரியமனத்தோன்காசியிற்சா
வுற்றபொழுதுநாய்க்கறிப்போருழைசாவுறினுமுறும்பதங்கேள். ()

ஞானமடைந்தபொழுதிலிவனல்வீடுற்றோன்மனமிறந்தோ
வீனமானவகம்பாவப்பிராந்தியன்றேவிடர்பந்த
மானவீடாவதுமடமையந்தகாரங்கெடலன்றோ
மானமிகுந்தவிவனெய்தின்மனிதர்பூசைசெயவேண்டும். (௬௪)

போற்றவணங்கப்பூசிக்கப்புகழவருந்திப்போய்க்காண
வாற்றவுரியோனெவனவன்வன்பிறவியறுப்போர்க்கனவரதஞ்
சாற்றுமகத்தாற்றீர்த்தத்தாற்றவத்தாற்றானத்தாற்கிட்டா
வூற்றவறிவாற்பிறவியறுத்துயர்ந்தோன்பத்திதரும்பயனே. (௬௫)

பரிந்திவ்வாறுகற்பித்துப்பகவன்மனுவாம்பேருடையோன்
விரிஞ்சன்றனதுகரத்தைப்புக்கானிக்குவாகுவெனும்
விரிந்தபுகழ்மன்னனுமந்தவிழியேபற்றிநிலைநின்றான்
வரிந்தகழற்காலிராமவெனவசிட்டமுனிவனருள்செய்தான்.(௬௬)

இட்சுவாகுகதை முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௧௬௬௨.

Koviloor Digital Library

*மாணுவேடன்கதை.

இத்தவாதிருக்கிற்சிவன்முத்தனுயினியதான
புத்திசேரிவனுக்கேதுபுதுமையாமதிசயந்தா
னத்தமில்பாத்தைக்கண்டோர்க்கதிகனேயென்றுகேட்ட
சுத்தாவிராமற்கத்தொன்மறைவசிட்டன்சொல்வான். (௧)

ஒப்பறுஞானிபுத்தியொன்றிலேயதிசயிக்குந்
தப்பறநிறைந்துசாந்தனுயவன்றன்பானிற்குஞ்
செப்புமந்திரங்களுேன்புதந்திரஞ்சித்திபாளுேர்
கைப்படுவின்போக்காதிகருமத்திற்புதுமையென்னே. (௨)

வேறு.

உலகாய்விரிந்தவிவராலுமொமுங்கால்விரிந்தவருத்தத்தாற்
பலமாமணிமாதிபும்பண்ணப்படுமாதவினுற்றனையறிந்தோர்க்
கிலதாமிவர்க்கோர்விசேடமுளவிழ்ந்தமூடப்புத்திகள்போ
லலனுகுவனெங்கனுமாசையறலாலிவனெஞ்சமலமதாம். (௩)

குறிநீர்வடிவாய்ப்பிறப்பிறப்பிற்கொடுநீள்காலமயக்கறலாற்
பிறியாவின்பத்தறிஞனுக்குப்பேசுங்குறியிவ்வளவன்றே
வெறிகூராசைசினமோகம்விதனமுலோபமாபத்துச்
சிறிதா¶நிபுணாளுமெனச்செப்பிவசிட்டன்மீண்டுரைப்பான் (௪)

மறையோரொருவன்றன்னுடையமகிமைகடந்துருத்திரனுய்
முறைநிர்வதுபோற்சிவனெளமூளைத்தானீசன்சிருட்டிதொறு
நிறைந்துயிர்களளவின்றிநிகழுமூலச்சித்தசைவாற்
றுறைதோறவைதான்றேன்றிடுமாற்றொடர்காரணமிங்கிலதாகும்

ஈசனிடைநின்றுற்பவமாயெழுந்தவுயிர்கடாஞ்செய்த
விசுகருமங்களினுலேமேன்மேற்பிறவிகளைமேவுந்
தேசமுடையாய்காரியகாரணத்தின்செய்தியிதுவாகு
மேசுபிறவிகருமமெனுமிரண்டினுக்குமிப்படியே (௫)

---

*வடமொழியில், "முனிவியாதன்கதை" என வழங்குவர்.
¶நிபுணம்=நிர்விகாரம், அல்லது அத்தியந்தம்.

Koviloor Digital Library

பரமமதனிலகாரணத்தாற்பரந்தவுயிரெல்லாமுண்டாம்
விரவுமதற்பின்பவர்க்கெல்லாமிகத்தாஞ்செய்தகருமங்க
ளுரியசுகதுக்கங்கடமக்குறுகாரணமாந்தனையறியாப்
பிரமைதனிற்சேர்சங்கற்பம்பேசுகருமங்களின்மூலம். (௭)

பந்தமிதானஞ்சங்கற்பமன்றேவதுபேற்றறுப்பாய்
முந்துசங்கற்பந்தவிர்ந்தான்முத்தியதுவாமதுதன்னைப்
புந்தியதனாற்பரிசயிப்பாய்பொருளும்பொருள்கொள்பவனுமுறின்
மைந்தமெள்ளவெப்போதுமறவாதொழிப்பாய்சங்கற்பம். (அ)

கொள்ளும்பொருளாகவும்வேண்டாகொள்வோன்வடிவாகவும்வேண்டா
வெள்ளுங்கருத்தெல்லாநீக்கியெதுசேடித்ததுவாவாய் [ண்டா
கள்ளும்பொருளொன்றினையிந்தநாடும்பொறிகளுறிலாங்கே
தெள்ளும்பற்றுள்ளதுபந்தஞ்சிறக்கும்பற்றில்லதுமுத்தி. (௯)

அற்பமுனக்கொன்றினிதாகிலதனாற்பிறப்பிலகப்பட்டாய்
பொற்பவுனக்கொன்றினுமினிமைபூணாதென்னிற்பிறப்பகன்றாய்
நிற்பநடப்பப்பொருட்டிரளினினக்குத்திரணமுதலாகத்
தற்பமுறுபொன்முடிவாகச்சற்றுமினிமையுறவேண்டாம். (௧0)

பற்றிலாதென்னுண்ணுதியென்பண்ணுகின்றாயெதைவிடுதி
யுற்றசெய்வோன்புசிப்போனன்றுபசாந்தியனீமதிமாண்டோன்
மற்றுநல்லோர்சென்றபொருட்கிரங்கார்வருவமதித்தெண்ணார்
முற்றுநிகழ்காலப்பொருளைமுறையாலெய்திக்கைக்கொள்வார்.()

மதமாமோகமையன்முதன்மனத்திற்பிணித்தகயிறுகளாந்
திதமாமனத்தைமனத்தாலேசேதித்திடலாமறிவோரா
விதமாநெடுங்கூர்விவேகத்தாலிரும்பாலிரும்பையறுப்பதுபோல்
விதமாமனத்தைமனத்தாலேவீய்ப்பாய்பிறவிமயக்கறவே. (௧௨)

அழுக்கையழுக்காற்கழுவுவர்கொலம்பையம்பாற்றடைசெய்வர்
வழுக்குநஞ்சையெதிர்நஞ்சான்மாற்றுகிற்பர்மதியுடையோ
ரொழுக்கமுறுமூன்றுளசீவர்க்குப்பர்தூலசூக்குமென
விழுக்கமாமொன்றுயர்பரமாமிதுசேர்ந்தந்தவிரண்டொழிப்பாய்()

மேகமனையாய்கைகால்கண்மேவுமிந்தவுடற்றனே
போகமுன்னச்சீவனுக்குப்பொருந்துதூலவுருவாகும்

Koviloor Digital Library

பாகமருவுசங்கற்பமயமாய்ப்பவபாவனைபன்னுஞ்
சோகமனஞ்சிவனுக்குருவாஞ்சுக்கவாதிவாகியமே. (கச)

மெய்பாய்மூலமிதின்றிவிகற்பமறுசின்மாத்திரமே
மொய்பார்சிவன்பரவடிவாமூன்ருகுவதுமுண்டகம்போற்
கைபாய்சுத்தசரியபதங்கண்டாயிதுவேயிதிலமூர்த்தி
மைபார்முதற்சொல்வடிவிரண்டுமொற்றியவைநானெனவேண்டா.

என்றுமுனிவையிராமனும்பார்த்தெந்தாய்நனவுகனுச்சுழுத்தி
துன்றுமதுவாயினமூன்றிற்ருேன்றுமதுவாந்துரியத்தை
யுன்னிவிசேடமுநவுரைப்பாயுயர்ந்தமுனிநாயகவென்ன
மன்னுமமுதமழைபோலும்வாக்கால்வசிட்டமுனியருள்வான் (கரு)

அகமென்பதுமென்றததுவுமுளதுமிலதுமறவிட்டு
நிகழுஞ்சமமாய்ப்பற்றறத்தன்னிலைக்கேநிற்றறுரியமதாந்
தகுதன்னிலையாய்ச்சமமாகிச்சகத்தின்ருேழிற்குச்சான்ருகி
புகல்சிவனின்முத்திபுமாகிப்பொருகற்பனைதீர்நிலைதுரியம். (கஎ)

இதுதானனவுகனவல்லவிடர்சங்கற்பமிலாமையினுற்
போதுவாஞ்சுழுத்திதானன்றுபோதமின்மைநீர்தலினுற்
சதுராவிந்தச்சகநன்றுந்தனதுநிலைக்கேசமித்திறக்கு
முதுஞானிகட்கிங்கிதுதுரியமூடர்க்குலகந்திரநிலையாம். (கஅ)

யாறுமெண்ணமதிற்சமந்தானெய்திச்சித்தமொருக்காலு
மாறுவினைசெய்பாதபடியாக்கிற்றுரியநிலைநிற்கு
ஞானிதனுங்கிழவோனெனினுஞானாதிமேவ
மேனுணடந்ததொருசரிதைகேட்பாய்மேதைகளின்மிக்கோய். ()

பெரியவடவியொன்றிடைபோர்பெரியமுனிவன்மகாமவுனம்
புரிபுநிலையோனவன்றனைபோர்பொருவில்வேடன்வந்தணுகி
பெரியுமென்கைக்கணைபடநோந்திங்கோர்நவ்வியோடியதாற்
றெரிபவஃதெங்ககன்றதெனச்செப்புமுனிவவெனக்கேட்டான் ()

கேட்டகிராதன்றனையந்தக்கேடின்முனிபார்த்தினியோனே
காட்டிலுறைவோர்சமநிலைமைக்கண்ணுமுனிவர்கணநாங்க
ணுட்டுவிவகாரம்புரிபுநவையாங்காரமாகிலநாங் [ருே.()
கூட்டுபோதியின்ருேழிலெல்லாங்கொள்ளுமனஞ்செய்குவதன்

Koviloor Digital Library

அதனுலகங்காரத்துருவாமர்நமனநிச்சயமாகத்
திதமாய்நழுவிநெடோளாஞ்செறிசாக்கிரசொப்பனசுழுத்திப்
பதமாமவையொன்றையுமறியேம்பரமதுரியநிலையானேம்
விதமாய்க்காணப்படுபொருள்கள்விமலதுரியத்திலதென்றான். ()

நீதின்முனிவனுரைபொருள்கடெரியாவேடனுங்ககன்று
ளுதலாற்கேடுரியத்துக்கயலோர்நிலையுமுளதன்று
லேதமானவிகற்பமெலாமிறந்தவறிவேதுரியமதா
மீதலாதிங்கயலொன்றுமில்லைக்கண்டாயிராகவனே. (உந)

கண்டநனவுகோரமதாங்கனவுசார்நமெனப்பெயராங்
கொண்டசுழுத்திமூடமதாங்கூறுமிம்மூன்றவத்தைகளும்
விண்டமனத்தின்வடிவாகும்விளம்புமிம்மூன்றையும்விட்டாற்
றண்டுமனம்போமனமிறந்தாற்சத்தாயொன்றுஞ்சமநிலையாம். ()

அந்தநிலையேயோகிகடாமரிதிற்சாதித்தடைகின்றார்
வெந்ததுயர்செய்சங்கற்பவிகற்பமில்லாத்துரியத்தே
மைந்தநிலையாயிடர்தீர்வாய்மகத்தாயுயர்ந்தமுனிவராய்ப்
பந்தமிலராய்ப்பேதமறும்பழையோர்விடாதிப்பதத்துறைவார். ()

மானுவேடன்கதை முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-ககூஅஎ.

நிருவாணப்பிரகரணம்.

எனைத்துஞானநன்னூலினியம்புமறுதியாதென்னி
லனைத்துங்கனவுகாண்பதுவேயன்றேவவிஞ்சையிங்கில்லை
வினைத்தின்கவலைசெய்கின்றவெய்யமாயைதானில்லை
தினைத்துன்பமுமற்றுபசாந்தத்திறமாமிதுவேதிகழ்பிரமம். (க)

சாந்தமாகிச்சிதம்பரமாய்ச்சமமாய்நொய்தாயான்மாவா
யேந்துசத்தியளவிலதாயிடும்பேர்பிரமமெனுமிதற்கே
சேர்ந்தபலநிச்சயம்பண்ணிச்சிலர்பாழென்பர்பரமேசன்
வாய்ந்தவுருவமென்பர்சிலர்மாவிஞ்ஞானமென்பர்சிலர். (உ)

Koviloor Digital Library

எல்லாநீக்கிமகாமவுனத்திருப்பாய்நிருவாணத்தினனுய்ப்
பொல்லாமனம்போய்ச்சித்தம்போய்ப்புந்திபோய்த்தானென்பது
சொல்லாலுமைகுருடுசெவிடொத்துத்தூயவான்மாவி [போய்ச்
னில்லாயுள்ளேமுகமாகிநித்தநோய்தாய்நிறைமதியாய். (௩)

நனவிற்சுழுத்திநிலேமேவிநன்றுயெல்லாமுள்ளகற்றித்
தன திச்சையில்வந்ததுபுறத்தேசமைப்பாய்சித்தமுண்டாகை
கன துக்கமதாஞ்சித்தமறிற்கனத்தசுகமாஞ்சித்தத்தை
யுனதுட்படுத்திபுணர்வின்மையாலேயொழிப்பாயுணர்வுருவாய். ()

சோகன்மைதிமைகளைச்சூழ்வுற்றிருந்துஞ்சமமாகிப்
பாகமின்றிக்கற்போலப்படிந்துநிற்பாய்பலபிறவி
மோகமகலுமவ்வளவுமுயலுந்தனதுமுயற்சியினு
னுகமனேயாய்சுகதுக்கநடுவுள்ளதுநோடலேயாய். (௫)

இந்தவளவாந்தன்முயற்சியிடர்தீர்முடிவில்பதமளிக்குஞ்
சிந்துகலேகணிறைமதிபோற்சிதவமுதேயுண்ணிறைய
வந்தவறிவன்சுகமடைவனகிலவுலகின்பொருட்சார
முந்தவறிந்துசெயற்செய்பாதவனுய்முத்தியெய்திடுமே. (௬)

போகபூமியேழுக்குமுறுசெய்தொழில்களெவ்வண்ண
மாகவிந்தப்பூமிகளேயடைந்தயோகிக்கெதுகுறிகண்
மோகமில்லாயுளாயென்னமுனிவனிராமற்குரைசெய்வான்
போகவசஞ்செல்பவன்மீண்டோனென்றுபுருடரிருவகையாம். ()

சுவர்க்கமுத்திகளைவிரும்பித்தொடருமவர்தங்குறிகேளா
யுவக்கும்விடேயெவ்வளவிற்றுலகநடையேயுபார்ந்ததெனு
நிவக்குமறுதிபாற்செய்வோனெடும்போகத்திற்செல்பவனு
மேவர்க்கும்விவேகமுறுபிறவிபெய்தற்கரியவியல்பினதே. (௮)

எறிபுங்கடலினுகத்துளேயிலாமைக்கழுத்துப்புகுவதுபோற்
பொறிவெம்பிறவிபநேகத்தாற்புருடன்விவேகியெனப்பிறந்து
முறிபும்பிறவிப்பபனிலதிம்மோகமமையுஞ்செய்தொழிலாற்
செறிவதென்னேயிவற்றுலேதினங்களெல்லாஞ்சென்றிடுமால். ()

தொழிலின்மிகுதியற்றுயர்ந்துதுயர்தீரஃதேதென்றுள்ளே
யழிவிலறுதியுள்ளோனேயடங்கத்திரும்புமவனுகுங்

Koviloor Digital Library

கழிவின்மயல்போய்ப்பவக்கடலைக்கடப்பதெவ்வாறெனவுன்னு
மொழிவில்விசாரத்தால்விரத்தியுள்ளேயுறுவனுள்வேண்டா. (௧௦)

உதாரமானதொழில்களிலேமுயன்றுநாளுமுண்மகிழ்வன்
கதாவுகின்றகிராமியமாங்கருமச்சழக்கிற்குச்சரிப்பன்
விதானகருமங்களைச்செய்வன்விளம்பான்செய்தகருமங்கள்
பதாதியுலகோர்வெருவாதபடிமெத்தென்றதொழில்புரிவன். (௧௧)

தீயவினைக்கஞ்சுவனென்றுஞ்செறியும்போகவேட்கையுறு
னேயநயமாய்மெத்தென்றுநிபுணமாகியிடம்பொழுதுக்
கேயவுரைகளுரைசெய்வானிவ்வாறுனவிவன்றுனே
யாயபொழுதுமுதற்பூமியானவொன்றையடைந்தவனே. (௧௨)

ஒக்கமூன்றுகரணத்தூலுயர்நல்லோரைப்பின்செல்வன்
மிக்கநன்னூலெங்கணும்போய்விரும்பிக்கொணர்ந்துபரிசயிப்பன்
றெுக்கசநமறுப்பதற்குத்துணிந்திவ்விசாரம்படைத்தவனே
தக்கபூமியறிந்தோனுந்தகுமாரியனுமற்றவனே. (௧௩)

இருளில்விசாரமெனுநாமத்திரண்டாம்பூமியெய்தினனுஞ்
சுருதிமிருதிநல்லொழுக்கந்தொடர்தாரணைநற்றியானங்கண்
மருவுகருமங்களைக்கேட்பான்மாசில்விருத்திப்பொருணிகழ்த்தும்
பெருகுபுகழ்சேர்பண்டிதரிற்பெரியோர்தம்மையினிதடைந்து. ()

செறியும்பதார்த்தப்பிரிவறிந்துசெய்யுந்தவிருங்காரியங்க
ளறிவன்செல்வமானமனைக்கதிபன்மனையையறிவதுபோன்
மறியுமதமாச்சரியமபிமானமுலோபமோகமெலாம்
வெறிதுபுறத்தெய்தினுஞ்சிறிதாய்விடுவன்பாம்புதோல்விடல்போல்

மதியிவ்வாறுள்ளவனூலால்வணங்குகுருவானல்லோரா
லதிகங்குய்யப்பொருளனைத்தினறுதியறிவனதற்பின்னர்
முதிர்பற்றின்மையெனப்பெயராமூந்துமற்றைப்பூமிதனைப்
புதிதாமலரின்மெல்லணைபோற்பொருந்திநிற்பன்பொலிந்தவனே.

உள்ளபடியேநூற்பொருளினெழுக்கந்திரமாய்க்கைக்கொண்டு
தள்ளின்முனிவரிடந்தோறுந்தளர்வொன்றில்லாமெய்ஞ்ஞானத்
தெள்ளுகதையினெழுங்குகளாற்றீர்க்கவாளுளதுகழிப்பன்
பள்ளிகொளவுமிருப்பதற்கும்படர்ந்தபாறையிடமாவன். (௧௭)

Koviloor Digital Library

பாயுமனமாதிபலத்தாற்பற்றாவிப்பஞ்சமமாகித்
தோயுமடவிகளிலுலவித்தொக்ககாலஞ்செலவிடுவ
னுயுகன்னூற்பரிசயத்தாலறங்கள்செயலான்மானிடருக்
கேயுமிந்தப்பொருணோக்கமிலங்குமுள்ளபடியாக. (௧அ)

உற்றமூன்றாம்பூமியைச்சேர்ந்துணர்ந்தோன்றானேயனுபவிக்கும்
பற்றிலாமையிருவகையாம்பகுத்துநாமிங்குரைசெயக்கேண்
முற்றுசாமானியமொன்றுமுதிர்ந்தசேட்டமொன்றாகு
மற்றிவ்விரண்டுமோரொன்றிலிரண்டுவகையாமனுகுலத்தோய். ()

பொருள்கடமிற்செய்பவனல்லேன்புசிப்போனல்லேன்றெளிவோ
குருவுமல்லேனெனப்பற்றில்குணமாஞ்சாமானியவிரத்தி [னுங்
பருந்துன்பமின்பமெலாம்பண்டைவினையால்வருமன்றே
யருள்செய்கடவுள்வசந்தானுமமைப்போனுதிலெனக்கெங்கே(௨0)

கோல்வதானபெருநோயாங்கொடியபோகப்பரப்பெல்லாஞ்
செல்வமெல்லாமாபத்துக்கிடமாஞ்செத்தல்பிறப்பதற்கா
மோல்வதானநற்புத்திக்குள்ளகவலைநெடுநோயாஞ்
சொல்வஞாலமெலாங்காலன்றொலைக்கமுயலும்விடாதென்றே. ()

பண்டமனைத்தின்பற்றற்றபசர்பாவனையுள்ளுறவுண்டாங்
கொண்டவுபீர்வாக்கியப்பொருளைக்குறிப்பாலழுந்துமனத்தோர்க்
கண்டவிதுசாமானியமாங்கவர்பற்றில்லாவிந்நெறியா [குக்
லண்டுபெரியோர்கூட்டரவாலறிவிலாதோர்நீக்கத்தால். (௨௨)

தானுமுணர்வினுட்டெளிவாற்றக்கபுருடவருத்தத்தா
லானுநன்னூற்பரிசயத்தாலங்கைநெல்லிதோன்றுதல்போ
லானூர்பிறவிப்பெருங்கடலினுயர்காரணமாம்பெரியகளை
தேனுரலங்கன்மணிமார்பாதெளியக்காண்கின்றன திடமாய்.(௨௩)

செய்வானனன்றிசன்றான்செய்வானலதென்பழவினைதா
னிவ்வாறுனசொற்பொருளினெண்ணமெல்லாநிச்சயமாய்க்
கவ்வாததிருரந்தகற்றிக்கலந்தசாந்தமோனநிலை
பெய்வான்கருணைமுகிலேமுன்பேசுசேட்டப்பற்றின்மை. (௨௪)

அகத்திற்புறத்தின்மேல்கீழிலாசைகளிலாகாயத்திற்
சகத்திற்பொருளிற்பொருளல்லாதவற்றிற்சடத்திற்றனியறிவிற்

Koviloor Digital Library

பகுத்துக்கருதா துபசாந்தம்பயின் றுநினைவற்றொளியற்று
மிகுத்துப்பிறப்பற்றடிமுடிவின்மேன்மைசேட்டப்பற்றின்மை. ()

மகிழ்வாம்வாசமதுரமுடன்வருநற்றொழிலாந்தளிர்மேவித்
தகவாமனத்தானுனிசேர்ந்துதடையாமுள்ளுநிறைந்தறிவா
மிகுமோர்கமலமடைந்துட்சேர்விவேகவிரவியான்மலர்ந்து
பகர்மூன்றாமிப்பூமிதனைப்பலமாய்ப்பலிக்கும்பற்றின்மை. (உசு)

மோகமில்லாதவர்செறிவான்முதுநல்லறத்தின்சமுகத்தாற்
காகதாலீயம்போலக்கருத்திலுதிக்குமுதலான
யோகபூமியுதித்தலுமேயுள்ளேயமுதமுளையொப்பா
மேகவிவேகநீர்பாச்சியிதுகாத்தளிக்கப்படுமுயன்றே. (உஎ)

விடுதியாலேதழைக்குமிதுவிசாரத்தாலவ்விடுதிதனை
வடுவிலுழவர்நென்முளைபோல்வருந்திவளர்க்கநாடோறு
நெடிவின்மறுபூமிக்கிந்தவொன்றேசநபூமியென
முடிவில்வெளியாமதிலிரண்டாமூன்றாம்பூமிதனைப்பெறலாம். ()

சேட்டமெனச்சொல்பற்றின்மைசேர்ந்தான்மூன்றாம்பூமியதா
மீட்டுபுருடன்சங்கற்பவெண்ணமொன்றுமில்லென்னக்
கேட்டகுமரனுரைசெய்வான்கீழாங்குலத்தோனுணர்வில்லோன்
பூட்டுதொழிலோன்பொல்லாதோன்புகன்றயோகமில்லாதோன்()

அவனுக்கெங்ஙனேயுண்டாமறைந்தநன்மையிதுநிற்க
விவணமுயர்பூமியிலொன்றையிரண்டைமூன்றாம்வேறொன்றைக்
கவர்வுற்றடைந்தோனுயிர்மாய்ந்தாற்கலந்துமேவுங்கதியேது
தவறிற்பெரியோயுரையென்னச்சான்றவசிட்டனுரைசெய்வான்()

மூடனுகிப்பலகுற்றமூடுமவனுக்கநேகமென
நீடுபிறப்பாமுதற்பூமிநேருமட்டும்பிறப்பகலா
நாடுமிதுவன்றியிற்காகதாலீயம்போனல்லநெறி
கூடுமெனினுமதனுலேகுறைவினிராசையதுபிறக்கும். (௩௧)

அன்றிநல்லோர்கூட்டரவாலடுத்தவிராகமதுபிறக்கு
மொன்றுமிராசையுறுபோதேயோகபூமியுறறப்பா
துன்றுமதனுற்பிறப்பகலுந்தொகுநூற்பொருளின்சுருக்கமிதா
நின்றயோகபூமியுடனிதனமடைந்தோர்நெறிகேளாய். (௩௨)

Koviloor Digital Library

யோகபூமியஞ்சம்விடாதுறலாற்பழையதீவினைபோ
மாகவிமானமதற்பின்புவந்துகொடுபோய்வானவர்வாழ்
நாகமுதலாமுயர்பதியினன்மேருவின்சூழ்பொழின்முழையிற்
போகமடவாரொடுங்கூடிப்புணர்ந்துசிந்தைகளிகூர்வன். (௩௩)

அருந்துபோகமாய்தலினலளவில்பண்டையிருவினையும்
பொருந்தமாயுமப்போதுபுவியிற்பிறப்பர்யோகிகடாந்
திருந்துசெல்வங்குணஞ்சுத்தஞ்சிறந்தநல்லோர்மனைப்பிறந்து
வருந்திமுன்னம்பழகுதலால்வழுவாயோகநெறிநிற்பர். (௩௪)

விதமாஞ்சகத்தைச்சாக்கிரத்தின்மிகப்போதந்தீர்புந்தியினாற்
போதுவாய்நோக்குமதனலிப்பூமிமூன்றுஞ்சாக்கிரமா
மதுவேதனிக்கேவலமியோகிக்காரியப்பேர்பெறுதிறமா
மிதனலிவனையுந்தவனென்றேத்தத்தோன்றுமறிவிலர்க்கும். ()

செயலினுரியமிகச்செய்வோன்செய்யத்தகாதசெய்யாதோ
னியல்பினெழுக்கந்தனினிற்போனியாவனவனேயாரியனு
முயலுமொழுக்கநூற்சித்தமுந்துகிலைமைவிவகாரம்
புயலினிறத்தோயுள்ளபடிபொருந்துமவனேயாரியனும். (௩௬)

முதலாமியோகபூமியிலேமுளைக்குமிரண்டாவதின்மலருந்
தழையுமூன்றுவதிற்பலிக்குந்தனியாரியனுந்திறமியோகி
யிதனிலிறந்தானெடுங்காலமிருந்துசுத்தசங்கற்பத்
துதவுபோகங்களையருந்தியோகியாய்மீண்டுற்பவிப்பான். (௩௭)

மூன்றுபூமிப்பரிசயத்தான்மூடத்தன்மையிறந்தழியே
யான்றஞானேதயமுண்டாயாதியந்தமறவிரிந்து
பூன்றமதியினுதயம்போற்பொலியுமனத்திற்போதமுற
வூன்றுயோகத்துடன்சேர்ந்தவுள்ளமுடையயோகிக்கே. (௩௮)

சமமதாகச்சொப்பனம்போற்சகத்தினைத்துநோக்கிடுவ
ரமராலாம்பூமிதனையடைந்தோர்முதற்பூமிகண்மூன்றுங்
குமரனேசாக்கிரமாகுங்கூறுநாலாவதுகனவாம்
விமலசித்தஞ்சரற்காலமேகசாலம்போலிறக்கும். (௩௯)

சிறக்குஞ்சற்பாவந்தானேசேடமாகநின்றிடுவர்
பறக்குஞ்சித்தமிறத்தலினற்படர்ந்தவிகற்பமேலாந்தோன்று

Koviloor Digital Library

வுறக்குஞ்சுழுத்திப்பதமென்னவுரைக்குமைந்தாம்பூமியிற்போய்
நிறக்கும்விசேடமனைத்துமறநிற்பனென்றுநிலைமட்டில். (௪௦)

இருமையென்னுமிருள்போயுள்ளெறியாநின்றபேருணர்வோ
னருமையானசுழுத்திநிலையாகிநிற்பனனவரதம்
பொருவினுண்ணேக்குடனிற்பன்புறத்திற்றொழிலிற்புரிந்தேயு
மொருமையுபசாந்தத்தாலேயுறக்கமிருந்தோன்போற்றெரிவன். ()

அழுந்துதுரியமெனுநாமத்தாறும்பூமியடைந்தொழுங்கி
னெழுந்துபலவாதனையிலனுயிப்பூமியிலேபரிசயிப்ப
னுழைந்துநானென்பதுமென்னுததுவுமுளதுமில்லாதுங்
கழிந்துவெறிதேநினைவிலனுய்க்காணுனிருமையொருமைகளை. ()

செறியுமுடிச்சுமையமும்போய்ச்சீவன்முத்தசுபாவத்தால்
வெறிதுவிடன்றியும்வீடுவிளைந்தோவியத்தின்விளக்கொப்பான்
பிறிவில்விண்ணில்வெறுங்குடம்போற்பிறிதுபுறனுட்சூனியமா[ன்.
யெறியுங்கடலினிறைகடம்போலெங்கும்புறனுண்ணிறைந்திருப்ப

இவனேயுளதாய்ச்சிறிதாங்கேயிவனேசிறிதுமிலனுவன்
றவறுவாறும்பூமியிலேதனிநின்றேழாம்பூமிதனை
யவனேயடைவனுடலின்றியடையுமுத்தியதுவாகுங்
கவர்சாந்தமுமேமொழிக்கெட்டாக்கனபூமிகளினெல்லையிதாம். ()

குலவுமுடனிர்முத்தியெனக்கூறுமேழாம்பூமிதனைச்
சிலர்கற்சிவமென்றுரைசெய்வர்சிலர்சூனியமென்றுரைசெய்வ
ரிலகுபொருளென்றுரைப்பர்சிலரியைந்தகாலமென்பர்சிலர்
விலகுபகுதியென்பர்சிலர்வெவ்வேறுகவிசாரித்து. (௪௫)

அயலோரான்மவிகற்பத்தோரவதானந்தீர்பேதத்தோ
ரியல்பாலிதுவென்றறிவிக்கவெட்டாவிதனைமிகவருந்தி
முயல்வாராகியறிவிப்பர்மொழிந்தபூமியிவையேழு
மயறீர்நிலையாற்பரிசயிக்கில்வருத்தஞ்சிறிதும்வாராதே. (௪௬)

மிகவுமதத்துமதம்பொழிந்துமெத்தென்றினிதாநடையுடைத்தாய்ப்
புகர்கொடுதிக்கைநுனிபதறிப்பொருகோட்டிணைசங்கிணைநிகராம்
பகடுண்டவர்த்தம்பண்ணுமதுபடுக்கப்படுமேலப்பொழுதே
சுகமாய்விளைவினரர்கடப்பர்சொன்னபூமிப்பரப்பெல்லாம். (௪௭)

Koviloor Digital Library

வழியுங்கடமாக்களிறதனைவன்பாற்கொல்லா திருப்பளவு
மிழியுந்துபாரார்போர்க்களத்திலெவனேசுபடனுமென்ன
மொழியுந்தவனைசொன்னமுரிக்களிறேதமர்க்களமே
தழியும்படியேதுறைவிடமேதருள்வாயென்றானருண்மூர்த்தி(சஅ)

இராகவர்க்குமுனிசொல்வானி துண்டாகவெனல்வடிவாய்ச்
சோகவிச்சையெனப்பெயர்கொள்சொரிமாமதத்தவெங்களிறு
தேகமென்னும்பெருங்காட்டிற்றிளாஞ்செருக்குமிகச்செய்யும்
வேகமதத்தவித்தியமாம்வெங்கன்றுகளையுடைத்தாகும். (சகூ)

இனிதாராவாலுரைசெய்புமிதபமென்னுங்காட்டுறையும்
பனிவல்வினைக்கோடிரண்டுளவாம்பலவாதனையாமதஞ்சொரியு
மனிசமெங்கும்படர்வடிவாமறிவில்பிறவிநோக்கங்கண்
முனிவிலடுபோர்ப்பூமிகளாமூரிமிச்சைமதகளிறே. (ரு0)

வெற்றித்திறமுந்தோல்விகளுமென்மேனல்கியிச்சையெனுஞ்
செற்றக்களிறுதினர்களாஞ்சிவத்திரளைச்சங்கரிக்கு
நிற்றத்தொழில்வாதனைபாவநெஞ்சுமதிசங்கற்பங்கள்
பற்றும்பிறவுமிதன்பெயராய்ப்பண்டமாய்நெஞ்சுள்ளிருக்கும்(ருக)

நிலைமையென்னுமுபர்கணையானிறைந்தவலியால்விநோதத்தாற்
றொலைவில்பொருளிபாவையுமாகித்துன்னியொன்றுமிச்சைதனை
யுலைவிலெல்லாவகையாலும்யோகிவெல்வதுத்தமமா
மலைவோடிதுண்டாகவெனலகத்தேதழைக்கிலதுகேளாய். (ருஉ)

பேசுமிதுதானிற்பளவும்பிறப்பாகச்சுவிடுசிகைதா
ஞசமடையாதிராகவனேஞானச்சுருக்கமிதுகேளாய்
பாசமுறவிதுண்டாகவென்றுபடருமனந்தானே
பேசுபிறவியிம்மனத்தினிறவேமுத்தியிவ்வளவே. (ருங)

மருளுமயறிர்விமலன்பால்வடித்துத்தெளிந்தவுபதேசந்
தருதல்கண்ணுடியின்புறத்திற்றயிலத்துளிபோலிளைப்பாறுந்
தெருளுமுணர்வாலிம்மோகந்தீர்ந்துவிச்சையங்குரமா
யுருவமனங்கிஞ்சிலுந்தோன்றுதுணர்விலாமைமாத்திரத்தால். ()

ஊறுவசார்த்தக்தருமிச்சைபொருதால்வரினுமப்போதே
யாறுவிடயத்துணர்வின்மையாளவதனுலறுத்திடுவாய்

Koviloor Digital Library

கூறுமிச்சைபலவடிவாய்க்கோத்தநெனினுமிவ்வுடலின்
மாறுதானவாதனையைமாற்றுதிராதுவுணர்வின்மை. (௫௫)

தள்ளுமுடிவின்றியினித்தைச்சவத்தின்றிரளைவிருப்பறல்போற்
